www.padippakam.com



# மெல்லச் சாகுது மனிசம்



படிப்பகம்

www.padippakam.com

## இன்னுமொரு கிருஷாந்தியா?

பிரெஞ்சு நாட்டில் ஓர் --
பிஞ்சுத் தமிழ்க் குஞ்சொன்று
பருந்துகட்கு இரையாச்சு
கிருஷாந்தியின் கொலையானால்
பள்ளி விட்டு வருகையிலே
பாதையிலே காமுகரால்...
நிதர்சினியும் அங்கே
நிம்மதியாய் வாழ புலம்பெயர்ந்து போன பிள்ளை
அந்தோ
நம்மவரின் கையில்
நசுங்குண்டு பலியானாள்
சொந்தச் சகோதரியாய் துணைசெய்ய வேண்டியவர்
அந்தோ அழித்தாரே
அவர் தமிழர் ஆவாரோ?
அங்கம் வகுத்து அணுஅணுவாய் கூறாக்கி
அவர் உயிரை எடுத்தாலும் ஆறாது எம் நெஞ்சு
அன்பான பிரெஞ்சு நாட்டுப் பண்புடையீர்
விண்ணப்பம்
அனுப்புங்கள் அந்த அநியாயப்படுவோரை வன்னிக்கு

இலங்கையிலிருந்து
**அ. சி பாலன்**

படிப்பகம்

www.padippakam.com

# அவல வாழ்வின் சுவடுகள்

மனிதாபிமானமற்ற கொலை காரர்களின் கைகளில் சிக்கிப் பலியாகிவிட்டாள் ஓர் அப்பாவிச் சிறுமி. மனித நாகரீகமற்ற விலங்குகளின் அற்பத் தனத்திற்கு அநியாயமாக ஓர் உயிர் விலையாகிவிட்டது. போரின் கொடுமையால் தம் உயிரையும் மானத்தையுமாவது காப்பாற்றிக் கொள்ளவென்று கரை கடந்து வந்து நிம்மதியாக சுவாசித்துக் கொண்டிருந்த சிறுமி நிதர்ஷினி.

அந்த அப்பாவிச் சிறுமியின் உயிர் குடித்த ஓநாய்கள் எவராக இருப்பினும் அவை ஈன இரக்கமற்ற தண்டனைக்குட்படுத்தப்பட வேண்டும் என்பதில் இருகருத்துக்கள் நிலவ இடமிராது என எண்ணுகிறேன்.

இன்று எம் பிறந்த மண்ணில் யுத்தத்தின் கொடூரத்தால் அவல வாழ்வு வாழ்ந்துகொண்டிருக்கும் எம்மினச் சகோதரர்கள் புலம் பெயர்ந்து வாழும் எமது வாழ்க்கை நிலையையும் இந்த நாட்டின் சக வாழ்வையும் எண்ணியபடி அத்தகைய வாழ்வு தமக்கு கிடைக்காதா? தாங்களும் இந்த நாடுகளுக்கு வந்து நிம்மதியாக வாழமாட்டோமா? என்று பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்க, நிதர்ஷினியின் மரணம் கேட்டு அவர்கள் எம்மைக்



படிப்பகம்

www.padippakam.com

கேவலமாக, சொந்தப் பண்பாட்டு விழுமியங்களை அவமதித்து வாழுகின்ற காட்டு மிராண்டிகளாக, கருதுவதுடன் தம்முடைய இரத்தங்கள் தான் நாங்கள் என்பதையிட்டு அவமானப்பட்டிருப்பார்கள். ஏன் எம்முடைய உறவுகளையே அருவருத்துக் கொள்வார்கள். நாங்கள் அவலம் மிக்கதோர் அவமான வாழ்வு வாழ்ந்த காலத்தில் விரக்தியின் விளிம்பில் நின்றபடி அக்கொடூரமான வாழ்வில் இருந்து தப்பியோடிவிட வேண்டும். அதற்காக என்ன விலை கொடுத்தாலும் தகும் என்ற கோணத்தில் நாடுகளாய் அலைந்து நம் பண்பாட்டையும் நாகரீகத்தையும் தொலைத்துவிட்டு இந்த நாடுகளுக்குள் நுழைந்தோம். ஐரோப்பிய மண்ணில் மட்டுமல்லாது ஏனைய புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் வந்து சேர்ந்த நாள்வரை பட்ட துன்பங்கள் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வரலாறே! அத்தகைய அவல வாழ்வின் சுவடுகள் இன்னமும் எல்லோர் நினைவிலும் அழியாதிருக்க அவற்றை மறந்து மனிதர்களாக மீண்டும் வாழவிட்ட இந்நாட்டில் எம்மை நாம் எப்படி இனங்காட்டிக் கொள்கின்றோம்? ஒரு சிறுமியைப் பிடித்து பூச்சியை நசித்துக் கொல்வது போல் நசித்துக் கொன்று அவள் வீட்டு உடமைகளை திருடித் தின்னுமளவிற்கு கேடுகெட்ட நாகரீகமட்டத்தில் கீழ்த்தரமான சமுதாயமாக, தம் கடந்த காலம் மறந்து, சகோதரத்துவம், நட்பு பாராட்டுதல் முதலிய அடிப்படை மனித நேயங்களைக் களைந்து குத்து வெட்டு, நம்பிக்கைத் துரோகம், பழிவாங்கல் முதலியவற்றுக்கு உதாரணம் காட்டத்தக்க காடையர் கூட்டமாக வா?

உயர்ந்த நாகரீகமும் பண்பாடும் தன்னகத்தே கொண்ட மூத்த சமுதாயத்தின் வழித்தோன்றல்களாக உலகம் கண்ட தமிழச் சமுதாயத்தின் பெயரை புலம் பெயர்ந்த தமிழர்களென்ற முத்திரையைக் குத்திகொண்டு இங்கு நாம் குழிதோண்டிப் புதைத்துக் கொண்டிருக்கிறறோமா?

அகதிகளாக ஓடிவந்த எம்மை அரவணைநத்த இந்த நாட்டின் அன்புக்கும் அனுதாபத்திற்கும் பாத்திரமாக வேண்டிய நாங்கள் மாறாக இந்த நாடுகளின் சிறைச் சாலைகளுக்குள் இடம் பிடித்துக் கொண்டிருக்கிறோமே!

எங்கள் சகோதரிகள் ஈழத்தில் படையினரால் வல்லுறவுக்குட்படுத்தப் படுகிறார்கள். சூறையாடப்படுகிறார்கள். எனக் கூசாமல் இந்நாடுளில் முறையிடுகின்ற நாம் இங்கு எமக்குள்ளே செய்து கொண்டிருப்பதென்ன?

தனது எதிர்காலத்தையாவது அமைதியாகக் காணத்தானே இந்தச் சகோதரி இங்கு வந்தாள். இவளுக்கு ஏன் இந்தக் கொடூரம்


படிப்பகம்

www.padippakam.com

நிகழவேண்டும்? இவள் யாரால் இக்கொடூரத்துக்கு ஆளானாள்? ஈழத்தில் பசியாலும் பட்டினியாலும் செத்துமடிபவரும் எம்மினத்தவர் தான். வறுமையின் கோரத்தால் மனவிரக்தியால் ஒரு சாண் வயிற்றுக்குச் சோறில்லையென்று ஒரு முழக்கயிற்றில் தம்வாழ்வை முடித்துக் கொள்கிறார்களே அந்தத் தன்மானம் மிக்க தமிழ்க் குடியில் பிறந்தவர்கள் தானா நாங்கள்? இந்த ஈனத்தனமான இழி கொலையைச் செய்த காடையர்கள்.

பசிக்கொடுமை போக்க, வறுமையைத் தணிக்க வழியில்லாமல் போக அவர்கள் கொலை செய்தார்களா? இல்லை, ஆனால் ஒரு வளர்ச்சியடைந்த நாட்டில் வந்து கொள்ளைக்காக கொலை செய்யும் கட்டத்தை அடைந்துவிட்டதே எமது சமூகம் என்பதை எண்ணி புலம் பெயர்ந்த நாம் ஒவ்வொருவரும் வெட்கப்பட வேண்டும்.

நம் மண்ணை விட்டுக்கிழம்பிய போதே நம் உதிரத்தோடு வாழ்ந்திருந்த அன்பு, கருணை, மனிதநேயம் முதலிய நல்லுணர்வுகள் யாவும்கலைந்துவிட்டனவா? உடன்வாழும் மனிதனை மதிக்கின்ற மானிட நேயத்தைக் கொஞ்சமாவது வகுத்திருக்கிறோமா? சாதாரண மனநிலையிலுள்ள சிந்திக்கும் ஆற்றல் உள்ள எந்த ஒரு மனிதனும் கண்டித்து வெறுக்கத்தக்க ஓர் காட்டுமிராண்டித்தனத்துக்கு இரையாகிவிட்ட இந்தச் சிறுமியின் பரிதாப மரணம் எமக்கு கூறிநிற்கும் செய்தியென்ன?

நாகரீகத்தின் உச்சியில் நிற்கும் நாடொன்றில் வந்தேறு குடிகளாக, அகதிகளாக வந்து எமது கடந்த காலங்களை மறந்து, எமது பண்பாட்டு விழுமியங்களை வந்த இடத்தில் வளர்ப்பதற்குப் பதிலாக தொலைத்துவிட்டு காட்டுமிராண்டிகளாக மாறிக் கொண்டிருக்கிறோம். பொருள் தேடும் அவாவில் அறம் மறந்து அடிப்படை மனிதத் தன்மைகளை மதியாது இருண்ட உலகத்தை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். இந்த நிலை மாறவேண்டும். எமது சந்ததிகள் தங்கள் பாரம் பரியத்தளங்களை அடையாளம் கண்டு அவற்றை நிலைப்படுத்திப் பயனிக்க வேண்டும்.

பொருள் சேர்க்கும் அவாவில் ஆன்மீக காருண்ய சிந்தனைகளை தூர வீசி எறிந்ததன் விளைவால் படு மோசமான கொலைகாரர்களை நாங்கள் உருவாக்கிவிட்டோம். அதற்காக நாம் இந்த சகோதரியின் இழப்பில் எமக்கும் ஓர் பங்குண்டு என்று தார்மீக உணர்வோடு மனமாரவருந்தி


படிப்பகம்

www.padippakam.com

இதுபோன்ற இன்னுமொரு நிகழ்வு எம்புலம் பெயர்ந்த கூட்டத்தில் நிகழாது காப்போம்!

அன்பான எம் இனிய தமிழ் சகோதர சகோதரியே!

நிதர்ஷினியின் இழப்பினூடே புலம் பெயர்ந்த எம்முடைய சமூக அமைப்பின் கீழ்த்தர நடத்தைகளின் வெளிப்பாடுகள் நிதர்சனப்பட்டுவிட்டன. நாம் இந்த அப்பாவிச் சிறுமிக்காகச் செய்கின்ற அஞ்சலி, இந்த நாட்டில் மட்டுமல்ல வேறெந்த நாட்டிலும் புலம் பெயர்ந்து வாழும் எம் சமூகம் இத்தகைய துரதிஷ்டவசமான கொடூரச் சம்பவத்தினால் கறைபடிய விட்ட எமது அடையாளங்களை மாற்றிக் கொண்டு மானிட நேயங்களை வளர்த்துக் கொண்டு தமிழர் தம் தரம் காக்கப்பாடுபடுதலேயாகும்!

நிதர்ஷனியின் ஆன்மா நித்தியசாந்திபெறட்டும்.

**அ. இயல்வாணன்**
**21.02.1999**





படிப்பகம்

www.padippakam.com

# இதுவே இறுதி நிகழ்வாகட்டும்!

நிதர்சினி சிதைக்கப்பட்ட செய்தி நெஞ்சுக்குள் நெருப்பாய் இறங்கியது. இந்தச் சின்னப் பூவைப் பறித்துச் சிதைக்க எப்படி மனம் வந்தது. கல்தோன்றி மண்தோன்ற முன் தோன்றிய மூத்தகுடியே உன் முகத்தில் உலகமே காறி உமிழ்கின்றது. வண்ணத்துப் பூச்சியைப் பிடித்து வதைத்து அதன் வாழ்வைப்பறித்த மிருகம் நம் இனத்திலிருந்துதானே வந்தது. தேசத்தின் பிரச்சனையால் தேசங்கள்தோறும் அகதிகளாய் சிதறி மண் இழந்து, உறவுகளைப் பிரிந்து எந்த இடம் எங்கள் சொந்த இடம் என்று தெரியாமல் குழம்பி நிற்கும் வேளையிலே தேகம் திமிரெடுத்தா இந்த மிருகத்தனம் நிகழ்ந்தது. நிலவுக்கு அஞ்சிப் பரதேசம் வந்த கதையாகிவிட்டதா நம் கதை.

நம்மினமே தலை குனிந்து நிற்கும் இத்தகைய செயல்கள் இனித் தொடரப் போகிறதா அல்லது இதற்கு முற்றுப்புள்ளி வைக்கப் போகிறோமா? ஒப்பாரி வைத்துப் புலம்பி அழுதுவிட்டு ஓரமாக ஒய்ந்துவிடப் போகிறோமா? அல்லது இத்தகைய நிகழ்வுகள் இனிமேல் நடந்துவிடக் கூடாது எனத் தடுக்கும் தார்மீகப் பொறுப்பை நாம் சுமக்கப் போகிறோமா?

இப்படித்தான் நேற்று நம் தேசத்தில், படைகள் பக்கத்துவீட்டுக் கதவைத்தானே உடைத்தன. பக்கத்துவீட்டுப் பையனைத்தானே பிடித்தனர். நம் வீட்டுக் கதவை அல்லவே! நம் பையனை அல்லவே! என்றிருந்தோம். இன்று நம் மகன் ராணுவக் காலடியின் கீழ். நாமோ நாட்டுக்கு வெளியே. இது போலவே இந்தத் துன்பநிகழ்வும் நமக்கில்லைத்தானே என்று இருந்துவிட்டோமென்றால் சமூகம் முழுவதுமே விஷம் பரவும். விதைகள் பறிக்கப்படும் என்பதை மறந்துவிடவேண்டாம்.

கண்டதே காட்சியாய் கொண்டதே கோலமாய் வழிதவறும் இளைய தலைமுறையை சரியான திசைவழியில் அழைத்துச் செல்ல சமூகம் முன்வரவேண்டும். தலைமுறை இடைவெளி தளரவேண்டும். புதிய தலைமுறையின் உணர்வுகளுக்கு மதிப்புத் தரவேண்டும். புகலிடசூழலில் வளரும் குழந்தைகளுக்கிடையே நமது கருத்துக்கள் திணிக்கப்படும்போது அதனால் ஏற்படக்கூடிய முரண்பாடுகளைப் புரிந்துகொள்ளவேண்டும். குண்டுச்சட்டிக்குள் குதிரையோட்டும் வாழ்வுமுறையை மாற்றி கதவுகள் ஜன்னல்களைத் திறந்துவிட்டு வாழ்வியலை விரிவாக்க வேண்டும். அனைத்தையும்விட கொடுமைகள் கண்டு பொங்கியெழ வேண்டும். அதனை யார் செய்தாலும் அதற்கெதிராக இறுதிவரை போராடவேண்டும். இல்லையேல் சிலுவைகளைச் சுமப்பதே நம் தோள்களின் கடமையாகிவிடும். சமூகம் முழுவதும் தன்னிச்சையாகவே விஷவிருட்சங்கள் வியாபித்துவிடும்.

எண்ணற்ற எதிர்காலக் கனவுகளைச் சுமந்து நின்ற நிதர்ஷினி என்ற சின்ன மலரின் இழப்புக்கு எந்த வார்த்தையிலும் ஆறுதல் தரமுடியாது என்பதை நானறிவேன். இருப்பினும் இத்தகைய மனித விரோதச் செயல்கள் எதிர்வரும் காலங்களில் நடக்கவிடாமல் பார்த்துக் கொள்வது நாம் நிதர்ஷினிக்குச் செய்யக் கூடிய உண்மையான அஞ்சலியாகும்.

***தி. உமாகாந்தன்***

18.02.1999



படிப்பகம்

www.padippakam.com

# புகலிடத்திலும் தொடரும் ஆணாதிக்க வெறித்தனங்கள்

12.02.1999 அன்று நிதர்சினி என்கின்ற 12 வயதுச் சிறுமி மீதான ஆணாதிக்கக் கொலைவெறித்தனத்தைக் கடுமையாகக் கண்டிக்கிறோம்!

பெண்களைச் சோதனை என்கின்ற பெயரில் அவமானப்படுத்துதல், பாலியல் இம்சைக்கு உட்படுத்தல், குழுவாகப் பாலியற் பலாத்காரம் செய்தல், மாற்றுக் கருத்திற்காகக் கொலைசெய்தல், சிறைகளில் அடைத்துச் சித்திரவதை செய்தல் போன்ற பெண்கள் மீதான கொடூரங்கள் இலங்கையில் மட்டுமல்ல புகலிடத்திலும் தொடர்கிறது. கொடுமைகள் நடாத்தப்படும் முறைகள் வேறுவகைப்படினும் உள்ளடக்கங்கள் அங்கும் இங்கும் ஒன்றுதான்.

ஜேர்மனியில் 1993இல் சுஜிதா என்றொரு சிறுமி கொலைசெய்யப்பட்டு எரிக்கப்பட்டாள். அவளது கொலைக்கான உண்மைக்காரணம் இன்று வரையில் வெளிவரவில்லை. அது மட்டுமல்லாது கொலையாளியும் இறுதிவரையிலும் கண்டுபிடிக்கப்படவில்லை. அன்று சுஜிதாவிற்கு இழைக்கப்பட்ட கொடுமை ஏனைய பெண்களுக்கு ஒரு எச்சரிக்கையாகவே இருந்தது. புகலிடத்திலும் பெண்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்கின்றதான எச்சரிக்கையே அது.

சுஜிதாவின் சம்பவம் மட்டுமல்ல, கணவன்மாரினால் அஸிட் ஊத்தப்பட்டது, தலைமயிர் வெட்டப்பட்டது, ஆடைகள் கிழிக்கப்பட்டது, வீட்டிற்குத் தீ வைத்துக் கொலை செய்ய முயற்சித்தது போன்ற இன்னும் பல சம்பவங்கள் மேலும் புகலிடத்தில் எமது பாதுகாப்பின்மையை உணர்த்தியது மட்டுமல்லாது ஆணாதிக்கத்தின் கொடுமைகளையும் தெளிவுபடுத்தியுள்ளன.

இந்த வரிசையில் நிதர்சனியின் கொலையும் இடம்பெறுகிறது.

அகதிகளாய்ப், பெண்களாய் உயிருக்கும் உடலுக்கும் பாதுகாப்பற்ற நிலையில் புகலிடம் தேடிவந்த எமக்கு நாசி வெறியர்களாலும் அந்நிய ஆணாதிக்க வெறியர்களாலும் மட்டுமல்ல எமது தேசத்தவர்களாலும் இங்கும் பாதுகாப்பு இல்லை என்பதையே நிதர்சினியின் சம்பவம் மீண்டும் எச்சரிக்கிறது.

சிறுமியர் பெண்கள் மீதான கொலைகள், பாலியற் பலாத்காரங்கள், துன்புறுத்தல்கள் இந்த வருடத்திலும் அதிகரித்துள்ளது. அதற்கு நாங்களும் சளைத்தவர்களல்ல என்பதனை உலகிற்குக் காண்பித்துவிட்டதாக யாரும் பெருமைப்பட்டுக் கொள்ளமுடியாது. மாறாக வெட்கித் தலைகுனிய வேண்டியதுதான். மேற்குறிப்பிட்ட சம்பவங்களை, நிதர்சினி போன்றோரின் கொலைகளை இன்னும் எத்தனை நாளைக்கு அனுமதிக்கப் போகிறோம்?

பெண்கள் மட்டுமல்ல, ஆணாதிக்க வெறியர்களை அனுமதிக்கும் ஒட்டுமொத்த சமூகமும் இதற்கு விரைவில் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

"பெண்களின் குரல்கள்", ஜேர்மனி
19.02.99



படிப்பகம்

www.padippakam.com

# இரத்தக் கண்ணீர்

அன்று.................

கிருஷாந்தியும்-கோணேஸ்வரியும் சிங்கள வெறியரால் குதறப்பட்ட போது! குமுறி எழுந்தது தமிழினம். ஊர்வலம் போய் உலகுக்குச் சொல்லி மனுக்கொடுத்தது. ஒரு இனத்தை இன்னொரு இனம் வேட்டையாடியதாக உரக்கச் சொன்னது உலகம்!

இன்று...............

நிதர்ஷினி என்ற பட்டு வண்ணச்சிட்டுக்குருவி ஓநாய்களால் குதறிப்போடப்பட்ட போது......... வெட்கித் தலைகுனிந்து வேதனையுடன் நிற்கிறது தமிழினம்! ஊர்வலம் போக முடியுமா? உலகுக்குச் சொல்ல முடியுமா? மனுக்கொடுக்க முடியுமா? ஒரு இனத்தை அதே இனம் வெறியாடியதாக வெட்கித்து நிற்கிறது உலகம்!

கறுப்புச் சூரியன் கரைதெரியாமல் கடந்து போகிறான். பாரிசிலே! காடைத்தனத்தின் கடிவாளம் பிடியிழந்து பிடிப்பிழந்து பின்னிக்கிடக்கிறது புலம் பெயர் மண்ணிலே!

ஏன்........? ஏன்..........? இந்தப் பிஞ்சுக்கு இந்தப் பரிதாபம்! பகட்டிலே வாழும் பரிதாபத் தமிழனே! மூலையில் உட்கார்ந்து முன்னூறு தடவை யோசித்துப் பார். சொந்த மண்ணிலே உருக்கொண்ட இரத்தவெறி கடல் கடந்து இந்த புலம் பெயர் மண்ணிலும் கருக்கொண்டு விட்டது. சொந்த மண்ணிலே வாத்தியார் சம்பளத்தில் மருத்துவர்களையும் பொறியியலாளர்களையும் உருவாக்கிய தமிழன் இங்கே தாயும் தந்தையும் உழைத்தும் தறுதலைகளைத்தான் உருவாக்க முடிந்திருக்கிறது.

ஏன்.......? உன் மனதிலே பதித்துக் கொள், என் இனமே!


படிப்பகம்

www.padippakam.com

வட்டிக்குப் பணம் வாங்கி வடக்கே வாசல் வைத்து- வளவோடு வீடு கண்டோம்! சீட்டுக் கட்டி சிங்கார வாகனத்தில் ஒய்யாரமாய் பவனிவந்தோம்!

அதிகாலை முதல் அலைந்துழைத்து அட்டியலுக்கும் அலங்காரத்துக்கும் அருமையாய் பணம் கொண்டோம். அடுக்கடுக்காய் கேக் அடித்து அலங்கார மண்டபம் கண்டு மகனுக்கு பிறந்தநாள் கொண்டோம்!

ஆனால்..................

உன் அருமை மகனுக்கு அறிவுரை கூறி- அன்புகாட்டி அறிவாளியாக்க முடிந்ததா?

இல்லை........... அடியாளாக்கத்தான் முடிந்தது!

என் அன்புத் தமிழினமே!

உன் மகன் எங்கே போகிறான்? எவரோடு சேர்கிறான்? எப்படி வளர்கிறான்? என்பதனை முதலில் கண்ணெடுத்து கவனிக்கப் பழகிக் கொள்!

இங்கே அனிச்ச மலர்கள் அழுகிப் போகநேராது!

கூக்குரலிடுவதைவிட்டு குறைகளைக் களைந்து கொள்!

குஞ்சுக்கிளிகள் இங்கே குதறப்படாது!

புரிந்து கொள் தமிழா! புரிந்து கொள்!

இன்று நிதர்ஷினி வீட்டுக் கதவு!

நாளை உன் வீட்டுக் கதவு!

என்ன செய்வாய் தமிழா! என்ன செய்வாய் தமிழா!

தட்டப்படுவதைத் தடுக்க இன்றே உறுதி கொள்!

உன் பிள்ளையை உன் கட்டுப் பாட்டில் வைத்துக் கொள்!

இனிமேலாவது வளர்ப்பு நாயிலே வைக்கும் அக்கறையில் பாதியையாவது உன் வாரிசிலே வைக்கப் பழகிக் கொள்!

வராது!

வரவே வராது!

வண்ண நிலவுக்கு வந்த இந்தக்கதி!

வேதனையில் என் கண்களில் கண்ணீர்த் துளிகளில்லை!

வெறுப்பிலே என் கண்களில் இரத்தத் துளிர்களே துளிர்க்கிறது!

**ஞானி**

***21.02.1999***



படிப்பகம்

www.padippakam.com

# நிர்வாணமானோம்

*"மானுட மகத்துவத்தின்*
*முகத்திலே கரி பூசி*
*வேருடன் களைந்தெறிந்த*
*வெற்றியோ எங்களுக்கு"*

***அருந்ததி***
***20.02.1999***

நிதர்சினி எனும் இந்தப் பதினொரு வயதுப் பெண்குழந்தை ஒரு செய்தியை இந்த உலகிற்கு உரத்துச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள். அது, "முந்திப் பிறந்த மூத்த பழங்குடிகள் என்று மார்தட்டி வீரம் பேசும் இந்த மறத் தமிழர்கள்" இன்றும் பரிணாமம் அடையாத விலங்குகள்தான் என்பதை மீண்டுமொருமுறை உறுதிப்படுத்தியதே.

ஒரு தனி, அல்லது சில நபர்களின் கொலைவெறி, பாலியல் மனோவிகாரம், அல்லது வக்கிரம் என்று மாத்திரம் இதனைச் சொல்லி விடுவோமாயின் அது எமது கடந்தகாலம் முழுவதும் நாம் கண்களை மூடியிருந்தோம் என்பதைத்தான் எடுத்துக்காட்டுவதாக இருக்கும்.

இவைகளின் மூலவேர் எது?

எதனாலெல்லாம் எம் மத்தியில் இப்படியான, விலங்குகள்கூட வெட்கப்படும்படியான செயல்களைச் செய்பவர்கள் உருவானார்கள்?

இவைகளுக்கெல்லாம் எது காரணம்?

இத்தகைய வினாக்களெல்லாம் எழுவது தவிர்க்கமுடியாததாகின்றது. இதிலே தள்ளிநின்று, தம் சுட்டுவிரல் நீட்டி நியாயம் பேசுவோர் தம்மை இவைகளிற்கெல்லாம் அப்பாற்பட்ட புனிதர்களாகக் கருதிக் கொள்வாரெனின் அதுதான் மிகப்பெரிய ஏமாற்று. ஒட்டுமொத்தத் தமிழினத்திற்கும் இதில் பங்குண்டு.

இவற்றின் மூலவேர்களைக் கண்டும் காணாதிருந்தோர், அதற்கு நீரூற்றி வளர்த்தவர், உரம் போட்டவர், உறுதுணையாக நின்றவர் என்று இந்த இரக்கமில்லா கொடூரசிந்தையின் தோற்றத்திற்குத் துணைபுரிந்தோர் யார்? நாம்


படிப்பகம்

www.padippakam.com

தான், நாமெல்லோரும்தான்.

பெண்கள் குறித்தும் பாலியல் குறித்தும் எம்மிடமிருந்த, இருக்கின்ற கருத்துக்கள் எவை? முற்றுமுழுவதுமான பிற்போக்குத் தனத்தையும் ஆணாதிக்கத்தினையும் ஆராதிக்கும் எம்சமூக அடிப்படைகளுக்கு முதுகு கொடுத்துக்கொண்டிருப்பவர் யார்? கொலைகள் குறித்து எம்மிடமிருக்கும் கோட்பாடுகள் என்ன? தாய் என்றும், குழந்தை என்றும், முதியவரென்றும் பார்த்தா எம் கொலைவெறிகளைத் தணித்தோம்?

இதிலே "தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா" என்ற வீரவாக்கியம் வேறு. உலகின் முன்னால் எப்போதோ தாழ்ந்துவிட்டது எம் தலை, இப்போதோ முகமூடி களைய நிர்வாணமாகியிருக்கிறோம்.

இந்தக் குழந்தையின் குரூர மரணம் இதனைத்தான் உணர்த்தி யிருக்கின்றது.

குற்றவாளிகள் பிடிபட்டுவிட்டார்கள் என்று யாராவது திருப்திப் பட்டுக்கொள்ளலாம், ஆனால் உண்மை அதுவல்ல. இது எமது விளைச்சலின் ஒரு சிறிய அறுவடை, மனநோயாளிகளையும் கொலையாளிகளையுமே உற்பத்தி செய்துவிட்டு கலாச்சாரம் பண்பாடு பற்றியெல்லாம் கருத்தரங்குகளும் பட்டிமன்றங்களும் நடத்திக்கொண்டிருக்கிறோம். இந்தக் கொடூரங்களையெல்லாம் சகித்துக்கொள்ளப் பழகிவிட்டவர் ஒருபுறம், இவைகளையே வாழ்க்கையாகக் கொண்டவர்கள் ஒரு புறம், சமூக அக்கறைகளுக்கு மாறாக இவற்றைத் தமக்கான சூடான செய்திகளாகவும் விளம்பரங்களாகவும் மாற்றி குளிர் காயும் "மீடியா வியாபாரிகள்" ஒரு புறம் என்று, இப்படியே ஒவ்வொரு புறத்தும் செல்லரித்துப் போயிருக்கிறது எம் இனம்.

வேரினை விஷம் அரித்தால் விழுது விடுவதெப்படி?

இதிலே பூக்கள் உதிர்ந்து போகும், பிஞ்சுகள் கருகிப்போகும், நாமோ யார் தலை மீதாவது பழியைப்போட்டு விட்டுத் தப்பித்துக் கொள்வோம், இதுதான் இன்றைய "நாங்கள்".

நடந்தது யாருக்கும் சம்மதமில்லாத ஒன்றாக இருக்கலாம், ஆனால் எவருக்கும் இதில் சம்பந்தம் இல்லை என்பதில்மட்டும் உண்மை இல்லை.

சாத்தியமான எல்லா வாசல்களையும் அடைத்துவிட்டதனால் சத்தியம் மூச்சுத் திணறுகிறது, சவக்குழிகளைத் தோண்டிக்கொண்டே செல்கிறோம், சந்ததி சந்ததியாக ஒரு இனம் தனது தார்மீக மதிப்பீடுகளை இழந்து சரிந்து கொண்டிருக்கிறது, ஆனால் நாமோ எப்போதும் சமரசங்களுக்குத் தயாராக இருக்கிறோம், சந்தர்ப்பவாதங்களுக்குள் சல்லாபம் புரிகிறோம், இடிபாடுகளுக்குள் புதையல்கள் தேடுகிறோம், எம் இழப்புகளையெல்லாம் தமது வரப்பிரசாதங்களாக மாற்றிக்கொள்ளும் வர்த்தகச் சூதாடிகளை வளர்த்துவிடுகிறோம்.

கொடுமைகளைக் கண்டிக்கத் திராணியில்லாத கூட்டத்தின் மௌனங்கள்மீது இத்தகைய அதிர்வுகள் தொடர்ந்து எழுப்பப்பட்டுக் கொண்டுதானிருக்கும்.


படிப்பகம்

www.padippakam.com

இந்தப் பிஞ்சுக் குழந்தையின் மரணம் முதற்படியல்ல, ஆனால் கடைசிப்படியுமல்ல.

இது வெறும் எச்சரிக்கையில்லை.

எழுதப்பட்டுக்கொண்டிருக்கும் வரலாறு.

நேற்று அரும்பிய அந்த மொட்டு மலருமுன்னரே தட்டிப் பறிக்கப் பட்டிருக்கிறது.

துளிர்விட்ட எங்கள் குருத்து வளருமுன்னரே கருக்கப்பட்டிருக்கிறது..

இந்தப் பூமியில் அவள் இருப்பை இல்லாதொழித்தவர் யார்?

களங்கமில்லாச் சிரிப்பை உதிர்க்கும் பச்சைக் குழந்தைகூட ஒரு பெண்ணாயிருக்கும் பட்சத்தில் வெறும் நுகர்பொருளாகி வீசப்பட்டிருக்கிறதே.

என்ன செய்தாள் அந்தப் பாலகி உங்களுக்கு?

எதற்காக அவளுக்கு இத்தனை பெரிய தண்டனை.

எங்களின் உண்மையான தோற்றத்தை உலகிற்குப் படம் பிடித்துக் காட்டிவிட்டுச் சென்றிருக்கிறதே இந்தக் குழந்தை.

இங்கே நாம் திரண்டிருப்பது இந்தக் குழந்தைக்கு அஞ்சலி செலுத்தவல்ல, அதற்கான தகுதி இங்கு யாருக்கும் கிடையாது.

முடிந்தால் மன்னிப்புக் கேட்டுக்கொள்வோம் இந்தக் குழந்தையிடம்.

எங்கள் காலத்தின், நாங்களே உருவாக்கி வளர்த்துவிட்ட கோரக் கரங்களுக்குள் சிக்கவைத்து சின்னாபின்னப்படுத்தியதற்காக இந்தச் சின்னஞ் சிறுமலரிடம் மன்னிப்புக் கேட்போம்.

இவளைப்போன்ற எத்தனையோ பிஞ்சுகள் உதிர்ந்து போவதற்குரிய நச்சுச் சூழலை உருவாக்கி வளர்த்த எங்கள் நாளைய சந்ததிகளாவது நசிந்து போகாமலிருப்பதற்காக இந்தக் குஞ்சிடம் மன்னிப்புக் கேட்போம்.

வாழ்வும் வாழ்வுகுறித்த இலக்கணங்கள் எல்லாமுமே புதையுண்டு போகவென்றே நாளெல்லாம் உழைத்து நாம் உருவாக்கிய பொறிக்கிடங்கில் எங்கள் ஒட்டுமொத்த இனமுமே விழுந்துவிடாதிருக்க இந்த ஞானக் குழந்தையிடம் நாமெல்லோரும் சேர்ந்து மன்னிப்புக் கேட்போம்.


படிப்பகம்

www.padippakam.com

# காமுகரை அடக்கி ஆழ்வோம்

வரலாற்றில் மட்டுமல்ல, - இன்றும்,
துரியோதனர் நிறைய உண்டு,
பாஞ்சாலி சேலையை காப்பாற்ற
கண்ணன் வந்தான்,
நான் கத்தியும் என்னைக் காப்பாற்ற
எத்தெய்வமும் வரவில்லை,
அதனால் நான் இறந்த பின்பும்
விழித்துக் கொண்டேன்,
பெண் குழந்தைகளை பெற்றவரே
சிறுமியர் பாலியல் கொடுமைக்காய்
அஞ்சி அஞ்சி வாழாது
காமுகரை அடக்கி ஆழுங்கள்.
யூடோ கராத்தே உண்டு
யுக்திகள் நிறைய உண்டு
புத்தியினைத் தீட்டி புதுமைப் பெண்ணாய்
உங்கள் புத்திரிகளை உருவெடுக்க
வைப்பீர்களானால்
பாலியல் காமுகர்கள் அஞ்சி ஓடாரோ?

*திருமதி நளாயினி தாமரைச்செல்வன்*
*19.02.1999*


படிப்பகம்

www.padippakam.com

# நோய்க்கு மூலகாரணம் சமூகமே

அந்தச் சின்னஞ் சிறு பாலகி நேற்றுக் கொலையுண்டாள். வேதனையும் கொடு துயரும் மிக்க இந்த அகோரத்தன செயற்தனத்தின் சூத்திரதாரிகள் யாரென நாம் சற்றுத் திரும்பின் புலம்பெயர் சூழலில் இத்தேசத்தில் வாழும் அகதிமுகம் கொண்ட எம் 'தமிழ்' இனத்தவனாய் அவன் இருப்பான். கொடுமனம் கொண்ட, கொலைவெறியும் வன்கொடுமைகளின் இயல்பான தேர்வும் அவனுக்கு எங்ஙனம் வருகின்றது? கொலைகளையும் கொள்ளைகளையும் அடாவடித்தனங்களையும் எவ்வாறு, எச் சூழலில் அவன் கற்றுக் கொள்கிறான்? ஐரோப்பிய நுகர்வுக் கலாச்சாரம், அதன் போதை, மோகம், தாக்கம் அவனை 'பணம் புரளும் மனிதனாய்' வாழவேண்டிய நிலைக்குத் தள்ளுகின்ற வேலை, அவனிடம் காணப்படும் கொலைத்தனங்களின் செயல் வடிவங்களை 'சுவீகாரம்' கொள்ள அவனுக்குப் பக்கபலமாய், துணையாய் இருக்கும் 'சமூக உளவியல்' தளத்தின் அதிகாரம் என்ன? இந்த அதிகார மமதை புலம்பெயர் சூழலில் வாழும் ஒரு சில நபர்களிடம் அளவுக்கதிகமாய்க் குடிகொள்வதன் உள்ளார்ந்த நோக்கம் யாது? கொலை முகாம்களும், ஓயாத ஒழித்துக் கட்டல்களும் நிறைந்த எம் சமுதாயத்தில் வெறுமனே சட்டத்தின் பிடியில் சிக்குவதன் மூலம் இது முடிந்த கதையாகி விடுவதில்லை.

நோய்களின் மூலவேர்களுக்கு சற்று நிதானமாய் மருந்திட முனைவோம்.

அந்த சின்னஞ் சிறு பாலகிக்கு என் இதய அஞ்சலிகள்.

**அசோக். க.**
**21.02.1999**


படிப்பகம்

www.padippakam.com

# கூவி எழுங்கள் கொடுமையினை எதிர்த்து

கோழிகளின் இறகினைக் கூட்டுங்கள்
வல்லூறுகள் வலம் வருகின்றன
ஆழ்கடல் கடந்தும் அருமந்த வாழ்வை
அலங்கோலம் செய்ய ஆயத்த வேள்வி
ஊழிக்காலம் உடைப்பெடுக்கிறது - நீதி
ஊமையாய் ஆமையாய் அடங்கிட
ஒருபோது உறங்கலாம் - ஆயினும்
அணையைப் போட்டு உடைப்படைக்க
உதவும் கரங்கள் உயர்த்துங்கள் எதிராய்.
வன்முறை வடிவ மனிதர் மேலாய்
வாரி இறையுங்கள் தீக்கொழுந்தை
வாழ்வியல் அறியா கோமாளிகள் மேல்
வாரிக் கொட்டுங்கள் கண்டனவாளை
வீழ்ந்துவிட்ட வாழினைப் பார்த்து
வெகுண்டு வெந்து முளை எழா வண்ணம்.
இது இனவெறியல்ல! மதவெறியல்ல!!
நிறவெறியல்ல! கொள்ளை வெறியிவை
கொதிப்பில் பெண்ணினம் கொள்ளை போனது
குஞ்சு ஆம் பிஞ்சு நிதாப் பஞ்சு
முளைக்கும் இனத்தின் துரோகிகள் ஒழிக
முந்திடும் முதலையின் இனம் காண்க,
கண்டதும் எழும்பா களையினை அறுங்கள்
பள்ளியில் பாதி, பகல் சாப்பாட்டில் மீதி.
மனிதம் பொய்த்த மாக்களின் வேட்டை
கொஞ்சம் நிமிருங்கள் உங்களுக்கும்
கொள்ளை நோயினர் கூப்பிடும் குரல்.
அஞ்சி நீவிர் அடைக்க ஆயத்தமா அல்ல
அடியோடு அறுக்க அணி திரள் வீரா
பெண்ணினம் குனிவு பேய்களின் நகையால்
கூவி எழுங்கள் கொடுமையினை எதிர்த்து
கூவி எழுங்கள் கொடுமையினை எதிர்த்து.

கோசல்யா சொர்ணலிங்கம்
முல்கைம், ஜேர்மனி.


படிப்பகம்

www.padippakam.com

# வெட்கித்தோம்

முகம், கை, கால்கள், உருவம் எல்லாம் மனிதனைப் போல் உள்ள நிர்வாணமற்ற மிருகங்களால் இளைக்கப்பட்ட கொடுமையால் நாம் நிர்வாணமாக நிற்கவேண்டியநிலை.

மனம் பதறுகிறது. எனக்கு எமது எதிர்காலம் பற்றிப்பயமாகத்தான் இருக்கிறது. புகலிட நாடுகளில் எமது இளம் சந்ததியினர் பதித்துவரும் விஷத்தடங்கள் எங்குபோய் முடியப்போகிறதோ என அனைவரும் பயந்துகொண்டிருக்கும் நேரத்தில், நடந்த அநியாயங்களைவிட, மிகக்கொடூரமான, இதைவிட ஒரு கொடூரத்தை இனி யாராலும் செய்துவிடமுடியாது என எண்ணவைக்கும் நிகழ்வாக 12 வயது பெண் குழந்தை நிதர்சினி கொடியவர்களால் சிதைக்கப்பட்டுள்ளார்.

மஞ்சள் துண்டுக்கு கழுத்தறுப்பவர்கள் என நாட்டிலும், கறுவல் அடையார் என புகலிடத்திலும் குந்துரஞ்சி கதையளந்து வீட்டுக்குள் வளரும் நஞ்சுமரங்களை கண்டுணர முடியாததால் இன்று ஒட்டுமொத்த இனமும் அந்நியத்தெருக்களில் தலை குனியவேண்டிய வெட்கங்கெட்ட நிலை. எனது மகன் அடையானைக் கோடரியால் கொத்தியவன், எனது மகன் பிஸ்ரல் கொண்டு திரிவதால் அவனையாரும் நெருங்கமுடியாது, நேற்றும் எனது மகன் கறுவலுக்கு வெளுத்துப்போட்டு வந்தவன் என என்னிடம் பெருமையடித்த பெற்றோர்களை நான் அறிவேன். அடப்பாவிகளா பார்த்தீர்களா விதை எப்படி விளைந்திருக்கிறது என்பதை?

பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளில் கவனம் செலுத்தாமல் பிள்ளைகளுடன் அன்பைப் பகிராமல், அவர்களின் பிரச்சனைகளை கேட்டறியாமல், புகலிடக்குழந்தைகளுக்கும் தங்கள் கலாச்சாரத்துக்குமிடையிலான ஒரு சமரச நிலையை ஏற்படுத்தாமல் வேலையும், சீட்டும், வட்டியும், ருபாயில் அந்நியப்பணத்தைப் பெருக்கிப்பார்ப்பதிலும் மேலும், மேலும் ஈடுபடுவார்களாயின் கொடூரங்கள் தொடர்கதையாகத்தான் இருக்கப்போகிறது. பெற்றோர்கள் முதலில்


படிப்பகம்

www.padippakam.com

பொறுப்புள்ளவர்களாக மாறவேண்டும். தவறு செய்ய முயலும் பிள்ளைகள் விடயத்தில் மிகத்தீவிரமான நிலைப்பாட்டை பெற்றோர்கள் கடைப்பிடித்தால் எதிர்காலத்தில் ஒரு கொடூரமான குற்றவாளி உருவாகுவதைத் தடுக்கலாம்.

நாம் இன்று நடந்திருக்கும் இந்தக் கொடூரத்தைக் கண்டிப்பதுடன் நின்றுவிடக்கூடாது. யாராவது செய்யும் பாவங்களுக்கும், கொடூரங்களுக்கும் நாம் சிலுவை சுமக்கமுடியாது. சமூக சீர்திருத்தத்தில் அக்கறை கொண்டவர்களுடனும், சட்டத்துடனும் ஒத்துளைத்து நம்மிடையே இருக்கும் சமூகவிரோதிகளை இனம் கண்டு நீதியின் முன் நிறுத்தி கடுமையான தண்டனை பெற செய்யவேண்டும். வளர்ந்துவரும் இளம் சந்ததியினரிடையே சமூகவிரோத சிந்தனைகள் உருவாகாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். எதிர்காலத்திலாவது நல்லதொரு நிலையை எமது சமுதாயத்துக்கு பெற்றுத்தர வழிவகுக்கவேண்டும். இந்த வரலாற்றுக்கடமையானது மனிதநேயமுள்ளவர்கள் முன் வைக்கப்பட்டிருக்கும் ஒரு சவாலாகும்.

தங்கை, கமலா, நண்பர் சிறீதரன் குடும்பத்தார், உறவினர்கள்படும் துயரத்தில் நாம் பங்குகொள்கிறோம்.

*சி.புஸ்பராஜா*
*19.02.1999*



படிப்பகம்

www.padippakam.com

# நாம் எங்கே போகிறோம்

எம் இனம் எங்கே போகிறது
தன் இனத்திற்கே எதிரியாய்
எப்போது மாறியது
குழந்தைகட்கு கூற்றுவனாய்
எங்கிருந்து தோன்றியது
குழப்பமாய் இருக்கிறது.
யாரால், யாருக்கு
எங்கே, எப்பொழுது
எந்தச் சந்தர்ப்பத்தில்
என்ன நடக்கும் என்பதை
ஊகிக்க முடியவில்லை
உணர்ந்துகொள்ள நேரமில்லை
சிறகடித்து வான்வெளியில்
வட்டமிடும் குருவிகளை
ஒவ்வொன்றாய்ப் பிடித்து - அதை
சிறகொடித்து சிதறடித்து
சிதைக்க நினைக்கையிலே
எஞ்சி நிற்கும் குஞ்சுகட்கு
தன்னைப் பலிகொடுத்து
அபாய ஒலி அறிவிப்பாய்
அடையாளம் காட்டியவள்
நிச்சயமாய் இங்கு
"நிதர்சினிக்" குஞ்சுதான்
இதற்கு முன்பு
சிதைக்கப்பட்டு சிறகொடித்த


படிப்பகம்

www.padippakam.com

பறவைகள்தான் எத்தனையோ
மனமும் உளமும் புண்ணாகி
வரண்டவைகள் எத்தனையோ
மிரண்டவைகள் எத்தனையோ
சுரண்டியவர் யார் யாரோ?
யார் அறிவார்?
உறவுகள் என்று சொல்லி
ஒரே மொழி என்று பேசி
கள்ளமில்லாப் பார்வையுடன்
களங்கமில்லா நெஞ்சத்துடன்
அருகமர்ந்து உரையாடி
மகிழ இனி எம்மால்
எப்படி முடியும்.
தனக்குள் தானே
ஒழிந்து கொள்வதும்
நமக்குள் நம்மையே
ஒழித்துக் கொள்வதிலும்
சலித்துப் போனது...?
இப்படியே தொடரும் எனின்
எங்கள் வீட்டுக் கதவுகள் - இல்லை
உங்கள் யன்னல்கள்
இல்லத்தில் எல்லாமும்
இல்லாமல்... போய்விடும்
நிதர்சனம் யாவும்
தர்சனம் ஆகாமல் - இவை
தொடரத்தான் வேண்டுமா?
என் தேசத்து மக்களே!

ஜெயந்தி சாம்சன்
19.02.1999


படிப்பகம்

www.padippakam.com

# இன்னுமொரு படுகொலை

யாழ்ப்பாணத்தில் கிருஷாந்தியைப் பலியெடுத்தவர்கள் இராணுவப் போர்வையில் கடமை புரிந்த காமவெறியர்கள். மட்டகளப்பில் கோணேஸ்வரியைக் கொலைசெய்தவர்கள் அதே இனத்தைச் சார்ந்தவர்கள். எங்கள் தமிழ்ப் பெண்ணை பாரிஸில் பலியெடுத்தவர்கள் எங்கள் எதிரிகளல்ல எம்மினத்தைச் சேர்ந்தவர்கள்.,

எம் மொழியைப் பேசுபவர்கள்.

எம் தாய் நாட்டைச் சேர்ந்தவர்கள்.

எம் சுதந்திரத்தைப் பகிர்ந்து கொண்டவர்கள்.

தென்னோலைத் தென்றலில் தமிழ் இசையையும் மொழியையும் கலந்தவர்கள்.

இவர்களுக்கு நிதர்ஷினி செய்த பாவம் என்ன?

இவர்களை நம்பியதா?

அகதிகள் என்று நாட்டை விட்டு நாங்கள் நகர்ந்த போது


படிப்பகம்

www.padippakam.com

கொலைகாரர்களும், கொள்ளைக் காரர்களும் கயவர்களும் , காமுகர்களும் புலம் பெயர்ந்தார்கள். இது இயற்கையின் நியதி.

இன்று புலம் பெயர்ந்த தமிழர்களின் கலாச்சாரம் எப்படி வளர்ந்திருக்கிறது என்பதற்கு இந்த இளம் பெண்ணின் படுகொலை சாட்சியாக இருக்கிறது.

சிங்களப் பேரினவாதத்தின் கொடுமைகளுக்கு வடக்கில் ஒரு சிருஷாந்தியும் கிழக்கில் ஒரு கோணேஸ்வரியையும் பலியாக்கியது போல் சீரழியும் தமிழ் இளம் தலைமுறையினரின் கலாச்சார அழிவுக்கு நிதர்ஷினி சாட்சியம் சொல்கிறாள்.

தமிழைக் தாயாக, தன் நாட்டைத் தாயாக தவழும் நதிகளையும் உயர்ந்த மலைகளையும் பெண் பெயரில் சொல்லி பெருமைப்பட்ட தமிழன் இன்று பெண்ணை ஒரு போகப் பொருளாகப் பாவித்துத் துவசம் செய்து தூக்கியெறியும் அளவு எங்கள் மனப் போக்கு மாறுமளவுக்கு கேவலமான இந்தியத் தமிழப்படங்கள் மட்டுமா காரணம்? குழப்பமான மேற்கத்தைய கலாச்சாரமா காரணம்? அல்லது புலம் பெயர்ந்த நாடுகளில் தங்கள் குழந்தைகளை அதாவது ஆண்களைச் சரியாக வளர்க்காத தாய்களா காரணம்?
இன்னும் இரண்டு தலைமுறையில் தமிழ் பேசத் தெரியாத தமிழர்களாக எங்கள் சந்ததி வளரும், அதே நேரத்தில் தமிழ்க் கலாச்சாரம் தெரியாத சமுதாயமாகவளரப் போகிறது என்பதற்கு இந்தக் கொலை ஒரு சாட்சியம்

*ராஜேஸ்வரி*
*லண்டன்*
***19.02.1999***


படிப்பகம்

www.padippakam.com

# வாருங்கள் வீதிக்கு!

மாசி மாதம் 12ம் திகதி மதிய நேரம் நடந்து முடிந்த அந்த நிகழ்வு உலகத்தையே ஒரு முறை உலுக்கியது. உதிரத்தை உறையவைத்தது. ஒவ்வொருவரும் தங்கள் இதயத்தைத் தொட்டுப் பார்த்தனர். பன்னிரண்டு வயது பிஞ்சுமலர் இரு மனித மிருகங்களால் கசக்கப்பட்டு கட்டிலுக்குள் செருகப்பட்டது.

தமிழினம் வெட்கித்தலை குனிய வேண்டும்! புலம் பெயர் நாடுகளில் தொடர்ந்து வரும் படுகொலைகள், அதிலும் பிரான்சு யாரைக் கொல்லவேண்டுமானாலும், எந்த நேரம் வேண்டுமானாலும் பிணங்கள் குவிக்க வசதியான மண். இதற்கு யார் காரணம்? நாம் சிந்தித்தே ஆகவேண்டும்.

1. இந்த அரசும் நிர்வாகமும் வெளிநாட்டவர் தான் என்கின்ற மெத்தனப் போக்கு!

2. தமிழ் பெருங்குடி மக்களாகிய எங்களது பொறுப்பற்ற போக்கு! சபாலிங்கத்தில் தொடங்கி இன்று வரை பிரான்சில் மட்டும் எத்தனை கொலைகள் நடந்துவிட்டது? இக்கொலைகளைத் தடுக்க நாம் என்ன செய்தோம்? ஒரு நாளோ, ஒருவாரமோ அதைப்பற்றிக் கதைப்போம்! பின்னர் மறந்துவிடுவோம்! சிலர் கலர், கலராக கண்ணீர் அஞ்சலி அடித்து கடைகளில் வைத்ததோடு கதை முடிந்தது. கொலைவெறி பிடித்தவர்களுக்கு எதிராக ஏதாவது கண்டணங்களைக் கொடுத்தோமா? இந்த அரசுக்கு ஏதாவது அழுத்தங்களைக் கொடுத்தோமா? தெருவுக்குத் தெரு எத்தனை சங்கங்கள் நடத்துகிறோம். அவையூடாக என்ன நடவடிக்கை எடுத்தோம். நமக்கேன் சோலி என்று ஆயிரம் காரணங்கள் காட்டி தட்டிக்கழிப்பதும் விதியிலே பழிபோட்டு விட்டுவிடுவதும் பழக்கமாகிவிட்டது. இதன் விளைவு!

ஒவ்வொரு வீட்டுக் கதவும் இறுகப்பூட்டப்பட்டு உற்ற நண்பனாக இருந்தாலும், உடன் பிறந்த சகோதரமாக இருந்தாலும் அஞ்சி, அஞ்சியே கதவு திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது.

யாருக்கு என்ன நடந்தால் நமக்கென்ன பொருள் தேடுவதுமட்டும் தான் நம்வாழ்க்கை என்றுமட்டம் இல்லாமல் இக்கொடுமைகளுக்கு எதிராக வீதியில் இறங்கிப் போராடத்துணியாத வரை இன்நிலை தொடரும்.

***அ.தேவதாசன்***
***19.02.1999***


படிப்பகம்

www.padippakam.com

# விழிப்புடன் இருப்போம்!

எம்மினத்தின் அழிவுக்கு நாமே காரணமாவதா?
இந்த நிலையை நினைத்துப் பார்க்கும் போது நெஞ்சு வெடிக்கின்றது
குமுறி அழுகின்றார்கள், நம் சமுதாயத்தினர்,
இவர்களுக்கு எவ்வாறு ஆறுதல் சொல்லப்போகின்றோம்?

நாம் பிறந்ததும், ஒரு அன்புத்தாயின் கருவிலிருந்து தான்
என்பதனை ஏன் உணரத் தவறிவிடுகின்றோம்?

மண்ணிழந்து, நிலமிழந்து, மண்ணின் மணம் இழந்து,
சொத்திழந்து, சுகமிழந்து சுற்றமிழந்து, சொந்தங்கள்
பந்தங்கள் இழந்து, அடுத்த நிமிடம், மரணம் நிச்சயம் என்று
தெரிந்தும், சாவோடு போராடி, சரித்திரம் படைத்து,
நம் மண்ணின் விடியலுக்காய், தினமும் வதையாகிக் கொண்டிருக்கும்
வீரபுருஷர்கள், எதற்காக தங்களையே அழித்துகொள்கிறார்கள்?

எமக்காக, எம் சமுதாயத்தின் சுதந்திரத்துக்காய் அல்லவா?
ஏன் நாம் சிந்திக்க மறந்துவிடுகின்றோம்?
புலம்பெயர்ந்த நாட்டில், உண்மையான உறவுகளுக்கு
அர்த்தம் தெரியாது. அனர்த்தங்களையும், அழிவுகளையும்
ஏற்படுத்தும் புல்லுருவிகளை, இனம் கண்டு, களைந்தெடுக்க,
நம் சமுதாயம் விழிப்போடு இருக்கவேண்டுமென்று,
வேதனையோடு வேண்டி நிற்கும்
அன்பன் T.ராஜகோபாலன்
18.02.1999



படிப்பகம்

www.padippakam.com

# சிறகை ஒடித்தவர் யார்...?

அனைத்துப் புலம் பெயர்வாழ் அத்தனை தமிழ் மக்களையும், அதிர்ச்சிக்குள்ளாக்கிய பச்சிளம் பாலகி நிதர்சினியின் மனிதாபிமானமற்ற கொடூர மரணம், இன்று ஒட்டுமொத்த தமிழ் மக்கள் அனைவரையும் கதிகலங்க வைத்திருக்கின்றது. அங்கே நம்தாயகம், படுகொலைகள், வன்முறைகள், பயங்கரவாதம் என்பவற்றின் மத்தியிலே, அடுத்த சந்ததியினரை கேள்விக்குறிக்கு உள்ளாக்கியிருக்குமிவ்வேளையிலே, புலம் பெயர்ந்து அகதிகளாய், அந்நிய தேசத்திலே சொந்த முகங்களை இழந்து இரவல் முகத்துடன் நம்நாட்டுச் சோகங்கள் அனைத்தையும் உள்ளடக்கி வாழ்ந்து கொண்டிருக்கும் நம்மினத்தினுள்ளே, சில புல்லுருவிகளின் மிலேச்சத்தனமான காடைத் தனத்தினால், இப்புலம் பெயர் மண்ணில் அனைத்து மக்களும், வெட்கித் தலைகுனிய வேண்டிய அவல நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றோம். நம் மண்ணிலே எத்தனை கிரிசாந்திகள், எத்தனை கோணேஸ்வரிகள் இன்னொரு இனத்தின் வெறியாட்டத்தினால் என்று ஆவேசம் கொண்டோம். ஆத்திரமடைந்தோம். இன்று இப்புலத்தில் இச் சிறுமியை மிருகத்தனமாய் கொன்றது யார்? இத்தனைக்கும் இச்சிறுமி செய்த குற்றம்தான் என்ன? இளம் மொட்டாய், தன் இதழை விரித்து சிரித்துச் சிறகடித்து பறக்கையிலே அதன் சிரிப்பை அழித்தவர் யார்? சிறகை ஒடித்தவர் யார்? ஈரமற்ற இத்தகைய ஈனச் செயல்கள் அனைத்து மக்களாலும் கண்டிக்கப்பட வேண்டும். கயவர்களின் கொடிய அரக்கத் தனம், பூத்துக்குலுங்க வேண்டிய பூவை இடையில் கருக்கியதே! என்ன கொடுமை! நிதர்சனமாய் ஈடு இணையில்லாத உறவாக இருந்த ஒரே பெண் செல்வத்தை இழ்ந்து தவிக்கும், அப்பெற்றோருக்கு யாரால் ஆறுதல் சொல்ல முடியும்? எந்தப் பெற்றோரினால் இத்தகையதொரு கொடுமையை தாங்கிக் கொள்ள முடியும்? அகதியாய் வாழும் இந்நாட்டிலும் இந்த நிலையென்றால் தமிழனுனக்கு இனி எங்குதான் நிம்மதியுண்டு. இத்தகைய இழிநிலைகளினால், எந்த எம் இன உறவையும் உறவென்றெண்ணி பழக மனம் மறுக்கின்றதே! ஈழத்திலே மக்கள் அங்கு உளரீதியான அதிர்ச்சியிலிருந்து மீள முடியாத துயரத்தில் இருப்பதைப் போன்றே, புலம் பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழ்ப்பெற்றோரும், தமது குழந்தைகளையும், தமது வாழ் நிலையையும் எண்ணி இறுதிவரை உளரீதியாக பாதிப்படைய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம்.


படிப்பகம்

www.padippakam.com

இன்று இப்புலம் பெயர் வாழ்வில் நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளோ ஏராளம். விரக்தியிலும் வேதனையிலும், சோகத்தைச் சுமந்து வாழும் இந்தப் புகலிட வாழ்வு, எதிர்காலம் குறித்து நம்பிக்கையை இழக்க வைத்திருக்கின்றது. இவ்விடயம் எமக்குச் சம்மந்தமற்றது, நாம் எம்மட்டில் அமைதியாய் வாழ்வோமென்று எண்ணி, புகலிடத்தில் இப்படியே நீண்ட நாட்கள் நாம் இருந்திட முடியாது. ஒவ்வொருவருக்கும், வீட்டுக்கு வீடு வெவ்வேறு வடிவங்களில் இது விஸ்வரூபம் எடுக்கலாம் என்பதை நாம் மனதில் கொண்டு அனைத்துத் தமிழ் மக்களும் ஒன்று சேர்ந்து இத்தகைய அநீதிகளுக்கு எதிராக கண்டனக் குரல் எழுப்புவோம்.

*18.02.1999*
நவா ஜோதி

# *தமிழினம் தலை நிமிர்வதெப்போ?*

*நம் தேசத்தில் நமக்கு எத்தனை சுமையுண்டு*
*அத்தனைக்கும் புறமுதுகுகாட்டி விரைந்து வந்தோம் அகதியாக*
*துள்ளி விளையாடும் பள்ளிச் சிறுமியையும்*
*பால்மணம் மாறாத பச்சிளம் குழந்தையையும்*
*ஈவு இரக்கம் இன்றி கொலைசெய்த காமுகர்கள்*
*ஈவு இரக்கம் அத்தனையும் நம்நாட்டில் ஈடுவைத்தா*
*நாடுவிட்டு நாடு வந்தீர்*
*வீரம் காட்டி வீறுகொள்ள வீரச்செயல் கிடைக்கலையோ?*
*தலைகுனிந்த தமிழரினம் தலைமீண்டும் நிமிர்கையிலே*
*தலைகுனிய வைக்கிறதே தரம் கெட்ட தமிழன் செயல்*
*பச்சிளம் பாலகனை பலியெடுத்த பாதகரை*
*வாழவேண்டிய சிறுகொடியை ஆண்டவன் அர்ச்சனை மலராக்கி*
*விட்டவரை*
*நெஞ்சு கொதிக்கின்றதே நீறு பூத்த நெருப்பாக*
*தமிழினமே தமிழினத்தின் தடையாக அமைந்துவிட்டால்*
*தரணியில் தமிழினம் தலை நிமிர்வதெப்போ?*

***திருமதி றூபி ஜெயசீலன் - சுவிஸ்***


படிப்பகம்

www.padippakam.com

# நிதர்சனம்

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் போதித்த பிரான்ஸ் மண்ணில் வாழ்ந்த ஈழத் தமிழர்களை கூனிக்குறுக வைத்துவிட்டது, இச்சம்பவம். ஈழத்தமிழரை மட்டுமல்ல அனைத்து சமூகங்களையும் ஒரு உலுக்கு உலுக்கிவிட்டது என்பதே மிகவும் பொருத்தமானதாகும். இப்படிப்பட்ட சம்பவங்கள் எமது சமூகத்தில் தொடர்கதையாவதற்கான காரணங்கள் என்ன? எதனால் தொடர்கின்றது? ஏன் தொடர்கின்றது? இவற்றிற்கான விடையும் எமது சமூகத்தின் மீதுதான் தங்கியுள்ளது.

ஆம், கடந்த மூன்று தசாப்தங்களாக ஈழத்தில் நடந்து வரும் நிகழ்வுகளே தூண்டுகோலாகும். அன்றெல்லாம் ஒரு சிறிய பிரச்சனையானாலும் நாலுபேர் கூடி சரி பிழை சொல்லி, பிழைவிட்டவன் சமூகக் கண்டனத்துக்குள்ளாகி - தன் நற்பெயரை இழந்துவிடும் நிலைக்குப் பயந்து திருந்தியோ அல்லது திருத்தப்பட்டோ வாழ்ந்ததைப் பார்க்கிறோம். வாழ்நாள் முழுக்க தன் எதிரியாய் வாழ்ந்தாலும் அவன் மறைந்த செய்தி கிடைத்தால் அவன் உடலுக்கு உரிய மரியாதை செலுத்தி அவன் வீட்டாருடன் துயர் பகிர்ந்தது எமது சமூகம்.

ஆனால் கடந்த மூன்று தசாப்தங்களாக எல்லாமே தலைகீழாக மாறிவிட்டது. எந்தப் பிரச்சனைக்கும் யாருமே வாய்திறக்கமுடியவில்லை. வீதிவீதியாய் மின்கம்பங்களில் கட்டப்பட்டவர்கள் உயிருக்குப் போராடிக்கொண்டிருக்க இறந்துபோகும்வரை தூரநின்று பாரத்துவிட்டு மௌனமாகக் கலைந்து சென்றது எமது சமூகம். தடியெடுத்தவனெல்லாம் தண்டல்காரனாகியதால் தடியில்லாத நாமெல்லாம் மௌனமாக வாழப் பழகிக் கொண்டோம்.

மரணங்களுக்கான பெயர்கள் கூட மாறிப்போனது நம் சமூகத்தில். போட்டாச்சு, தட்டியாச்சு என்று அடைமொழியில் அழைக்கத் தொடங்கினோம். பத்துப் பதினைந்து கொலைசெய்தவர்கள், பத்துப் பதினைந்து வாக்குப் பெற்று


படிப்பகம்

www.padippakam.com

பாராளுமன்றம் சென்று மக்கள் பிரிதிநிதியானார்கள். சமுதாயத்தில் நீதி, நேர்மை, தர்மம், நியாயம், மனிதாபிமானம் எல்லாமே மாறிப் போனது. வன்முறைச் சமுதாயமாக மாறியது நம் சமுதாயம்.

அந்த வன்முறையின் எச்சங்கள்தான் இன்று புகலிடத்திலும் தொடர்கிறது. பத்துக் கொலைகளை அங்கு செய்தவனுக்கு பதினோராவது கொலையை இங்கு செய்வது ஒன்றும் பெரிய விடயமல்ல.

எச்சங்களின் தொடர்ச்சியைப் புகலிட சமூகம் இன்னமும் பார்த்துக் கொண்டிருக்கப் போகிறதா? அனைவர் மனங்களிலும் கேட்கப்படும் கேள்வி இதுதான். இல்லை, பார்த்துக் கொண்டிருக்கமுடியாது. இந்நிலை மாறவேண்டும். புகலிடச்சூழல் இவ் வன்முறையாளருக்கு நல்லதொரு சந்தர்ப்பமாக அமைந்துவிடுகின்றது. இந்நிலைமாற ஆரோக்கியமான மாற்றங்கள் செய்ய, மனிதநேயம் கொண்ட அனைவரும் இணைந்து செயற்பட்டு இப்படியான இழிசெயல்களைத் தடுக்கவேண்டும். புகலிடத் தமிழர்களே முன்வாருங்கள்.

நிதர்சினியின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

*உதயகுமார்.*
*20.02.1999*

## கண்ணீர் அஞ்சலி

*வண்ண மலரே வளரபிறையே*
*இருள் சூழ்ந்ததேனோ சிறுமலரே*
*பிஞ்சுமுகம் அறியா வஞ்சகர்*
*வாழும் பூமியில் வாழ்வெதற்கு*
*வாழ்ந்தது போதும் என்றா*
*நிதர்சினி நீ சென்றுவிட்டாய்.*

***வல்வை - சுஜேன்***
***சுவிஸ்***



படிப்பகம்

www.padippakam.com

# நமது கையால் நாமே தூக்குப்போட்டு . . . !

நிதர்சினியின் கொலை – பூ மிப்பந்தின் எந்தப் பொட்டிலும் தமிழர் தரித்திருக்கமுடியாதபடி எல்லோரையும் உலுக்கிவிடிருக்கிறது, சந்தேக நபர்கள் தமிழர்கள் என்பதால். அல்லாதவிடத்து பலரின் பலவிதமான முணுமுணுப்புகளோடு சாதாரனமாகிப் போயிருக்கலாம். இச் சம்பவத்தை வெறுமனே கொலை எனக் குறிப்பிடுதல், ஒரு அனுதாப அலையை வீசிவிட்டு மறுகணமே அடங்கிப் போய்விடும். நிதர்சினி எமது சமூகத்தில் முளைவிடும் வக்கிரக் கொலையாளிகளுக்குப் பலியாகியிருக்கின்றார். இது முதலும் அல்ல, முடிவும் அல்ல.

களவு, கப்பம், பாலியல் பலாத்காரம், கொலை என வல்லாவற்றையும் ஒன்றுசேர்ந்து நோக்க வைக்கும் இப்பலியை – ஒரு மனநோய் என்பதற்குள்ளோ, அன்றி களவு – வக்கிர வெறியாட்டமாகவோ குறித்த நபர்களின்மேல் குறுக்கிவிடுதுடன் திருப்பதிப்பட்டுக் கொண்டுவிட முடியாது. ஏனெனில் இச்சம்பவத்தை யுத்தத்தின் பக்கவிளைவாகவே பார்க்க முடிகிறது. முடிவேயில்லாத அதிகாரத்துவ ஆட்சிக்கெதிரான யுத்தம், ஜனநாயகத்தை மறுக்கும் அரசியற் போரட்டங்கள் எல்லாம் சமூக விரோத செயல்களுக்கே இட்டுச் செல்கின்றன என்பதற்கு சர்வதேச உதாரணங்கள் பல.

இரு தசாப்தமாகத் தொடர்ந்து வரும் யுத்தம் – கொலைக்கு அஞ்சாதவர்களாக, மனித சிதைவுகளுக்குப் பழக்கப்பட்ட, பயிற்றப்பட்டவர்களாக நம் சமூகத்தை மாற்றி வளர்த்து வருகிறது. மனித நேயமும், மக்கள் நேசிப்பும் அற்ற ஆயுதப்பிரயோகம், குறித்த நோக்கத்துடன் மட்டும் மட்டுப்படுவதல்ல. இந்த நோக்கம் ஏற்கனவே பாலியல் பலாத்கரம் தவிர்ந்த அனைத்தையுமே புனிதமாக்கி விட்டிருக்கின்றது, நோக்கமற்ற அல்லது அதிலிருந்து தவறுபர்கள் எதையும் செய்யும் துணிவுடன் நம் முன்னே நடமாடிக்கொண்டிருக்கிறார்கள். இவை குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். எமது சந்ததி யுத்தத்தின் குழந்தைகளே என்பதில் நாம் கவனமாக இருக்கவேண்டும். எடுத்ததற்கும் வன்முறையைப் பிரயோகிக்கும் எல்லாவற்றையும் நாம் அனுமதிக்கலாகாது. அல்லாதவிடத்து இந்த வன்முறை உணர்வும் பயிற்சியும் பல சமூகவிரோதச் செயல்களுக்கு இட்டுச்செல்வதை நம்மால் தவிர்க்கமுடியாது போய்விடும். நமது கையால் நாமே தூக்குப்போட்டுக்கொண்டு அழிந்து போனவர்களாவோம்.

நிதர்சினியின் குடும்பத்தவரின் இழப்பின் துயரில் நாமும் பங்குகொள்கிறோம்.

உயிர்நிழல் (எக்ஸில்)

20-02-1999




படிப்பகம்

www.padippakam.com

# நிதர்சினிக்கு

12 வயதான உன்னை
எப்படி முடிந்தது
மனிதத்தன்மையற்றவர்களால்
ஏன் இவர்களை சீ
அடையாளம் காணாமல்ப்போனாய்.
இவர்கள் உனக்கு
மாமாக்களாகவோ, அண்ணன்களாகவோ
தெரிந்திருக்கக்கூடும்
நீ இறந்துவிட்டாய்
இவர்கள் இருக்கும் வரை
உன் போன்ற பல சிறுமிகள்
இறக்கக் கூடும்
இந்தக் கொடூரமானவர்கள்
ஒழியட்டும் உலகைவிட்டு

ரஞ்சினி Franktort



*பூவுலகில் பூவை ஒன்றைக் கசக்கினர்*
*காமுகர்.*
*இவ்வுலகில் இளம் மொட்டை ஈனமற்றோர்*
*இரக்கமின்றி தாக்கினர்.*
*அவ்வுலகுக்கே ஆதரவற்று அலங்கோலமாக*
*அனுப்பினர் அறிவிலா.*
*கல்மன நெஞ்சர்கள் கட்டிவடியில்*
*கண்ணீர் அஞ்சலிக்காக்கினரோ.*

**கலையரசி. (ஜேர்மனி)**
*19-02-1999*

படிப்பகம்

www.padippakam.com

# அபாய எச்சரிக்கை

கடந்த 13.02.1999 அன்று செல்வி நிதர்சினிக்கு நிகழ்ந்த கொடுமை; அதன்மூலம் அவரது பெற்றோருக்கு ஏற்படுத்தப்பட்ட ஈடுசெய்யமுடியாத இழப்பு என்பவற்றை ஒரு தனிப்பட்ட குடும்பத்திற்கு ஏற்பட்டபாதிப்பு என்பதைவிட புலம்பெயர்ந்த ஒட்டுமொத்த தமிழ்சமூகத்திற்குமான பாதிப்பாகவே பார்க்கத்தோன்றுகிறது.

நிதர்சினி மட்டுமல்ல இன்னும் பல தமிழ்சிறுமிகள் தமிழ்பெண்கள் தமிழர்கள் புலம்பெயர்ந்த பெரும்பாலான நாடுகளில் கொலைசெய்யப்பட்டிருக்கிறார்கள் பல இளைஞர்கள் வயோதிபர்கள் மூதாட்டிகள்கூட கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள். மாதம் ஒரு கொலை, வாரம் ஒரு கொள்ளை என்ற கணக்கில் இந்த குற்றப்பட்டியல் நீட்சியடைந்துகொண்டிருக்கிறது.

தமிழ் இனம் எவ்வாறு தனது சொந்த மண்ணில் பௌத்த சிங்கள பேரினவாத அரசின் படைகளுக்கும் சிங்கள காடையர்களுக்கும் அஞ்சி தமது வீட்டுக்கதவுகளை இறுகப்பூட்டிக்கொண்டு அச்சத்துடன் வாழவேண்டிய சூழ்நிலையில் உள்ளதோ அதேபோன்ற ஒரு சூழ்நிலையிலேயே புகலிடநாடுகளிலும் வாழவேண்டிய அச்சுறுத்தல் புகலிடத்தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்த அச்சுறுத்தல் தமிழர்களாலேயே தமிழர்களுக்கு ஏற்படுத்தப்பட்டிருப்பதுதான் மிக முக்கியமான விடயம். தங்களது சொந்த நாடுகளைவிட்டு புலம்பெயர்ந்த எல்லா இனத்தவர்களிடையேயும் நாடு-இனம்-மொழி மற்றும் தங்களது இருத்தல் பற்றி அக்கறைஇல்லாத ஒரு கூட்டம். புகலிடநாடுகளின் பெருநகரச்சீரளிவுக் கலாச்சாரத்துள் சிக்கி, அந்த சுகபோகத் தேவைகளை ஈடுசெய்வதற்காக கொள்ளையடிப்பதையும் கொலைசெய்வதையும் பாலியல் வல்லுறவு கொள்வதையும் தொழிலாகக்கொண்டுவிடுவது வழக்கம். இதற்கு தமிழ்சமூகமும் விதிவிலக்கல்ல. ஆனால் மற்றச்சமூகங்களோடு ஒப்பிடும்போது விகிதாசாரஅடிப்படையில் தமிழ்சமூகத்தில் இது அதிகமாக இருப்பதும் அதிர்ச்சிதரத்தக்கதாயுள்ளது. அதைவிட மிகமுக்கியமானது மாற்று இனச்சீரளிவுவாதிகளுடன் கூட்டுச்சேர்ந்துகொண்டு தமிழர்களுடைய இலக்குகளைத்தாக்குகின்ற கொள்ளைஅடிக்கின்ற போக்கு தமிழ் சீரளிவுவாதிகளில் உள்ளதாகும். இதே தமிழ்சீரளிவுவாதிகளை


படிப்பகம்

www.padippakam.com

கூட்டுவைத்துக்கொண்டு தங்களது இன இலக்குகளை தாக்குவதற்கு மாற்று இனச்சீரளிவுவாதிகளில் பெரும்பாலோர் இல்லை என்பது கவனிக்கப்படவேண்டிய ஒன்றாகும்.

மாற்று இனச்சீரளிவுவாதிகளிடம் கூட அவர்களிடம் நாடு இனம் பற்றி இருக்கக்கூடிய சிறிதளவாவது அக்கறை நம்முடைய தமிழ் சமூகத்தில் இல்லாதிருப்பதற்குக்காரணம் எம்மைப்பற்றி எமது இனத்தைப்பற்றி அக்கறையில்லாது இருப்பதாகும்.

நாங்கள் யார்? எங்கிருந்து வந்தோம்? எங்கள் எதிர்காலம் என்ன? எங்கள் சந்ததிக்கு நாங்கள் எதை விட்டுச்செல்லப்போகிறோம் என்ற கேள்விகளை எங்களுக்கு நாங்களே கேட்கவேண்டும்.

பிரான்ஸின் பிரபல சிந்தனையாளரான ஜோன்போல் சார்த்தர் சொல்வார்.. 'நாம் வெறுமையில் இருந்து வருகின்றோம் வெறுமைக்குச்செல்கிறோம். இடையில் ஒரு நொடி இங்கே வாழ்கிறோம்.

நாம் புறஉலகின் ஒரு அங்கமாக சூழ்நிலைகளால் உருவாக்கப்படும் பொருட்களின் மத்தியில் மக்கள்கூட்டத்தோடு கூட்டமாக வாழ்பவர்களாக இருந்தால் நாம் இன்னும் வாழ்வதற்கான தகுதியைப் பெறவில்லை. போலியாக வாழ்கின்றோம் என்றுதான் அர்த்தம். அதாவது நாங்கள் இன்னும் மனிதர்களாக வாழவில்லை. நமது லட்சியங்கள் நமது மதிப்பீடுகள் நமது உலகம் ஆகியவற்றை உருக்குவதற்கான முழுப்பொறுப்பையும் நாம் எடுத்துக்கொள்கின்றபோதுதான் நாம் வாழத்தகுதியுடைய அசல் மனிதர்களாகின்றோம்' என்று.

அதாவது நாம் மந்தைகளாக அல்லாமல் மனிதர்களாக வாழவேண்டுமானால் எங்களுக்கென்று ஒருகுறிக்கோள் வேண்டும். ஒரு லட்சியம்வேண்டும். இந்தக்குறிக்கோளையும் லட்சியத்தையும் முதன்மைப்படுத்தி ஒன்றுபடும் ஒரு சமூகத்தால் மட்டுமே புலம்பெயர்ந்த ஒரு அந்நியச்சூழலில் தன்னுடைய சுயஅடையாளத்தை தன்னுடைய இருப்பை உறுதி செய்யமுடியும்.

ஒரு சீரளிவுவாதிக்கும் சீரளிவுவாதத்துக்கும் எதிராக கடுமையாக போராடவேண்டிய காலகட்டம். அது விரைந்து பரவி புலம்பெயர்ந்த தமிழ் சமூகத்தை ஒட்டுமொத்தமாக அழிப்பதற்குமுன் அதற்கெதிராக நாம் போராடவேண்டும். சீரளிவுவாதிகளை தயவுதாட்சணியமின்றி அம்பலப்படுத்தவேண்டும்.

**நக்கீரன்.**



படிப்பகம்

www.padippakam.com

# காணிக்கை

என்று தணியும் இந்த கொலைஞர்கள் வெறியாட்டம்?! இறைவா!, கொடுமையிலும் கொடுமை இளமையில் வறுமை! அதிலும் கொடியது இளமையில் படுகொலை! அரச படுகொலைகளுக்கு அஞ்சி, அன்னிய புகலிடம் தேடி புலம் பெயர்ந்து வாழ்கின்ற இந்தக் காலகட்டத்திலும், கொலைகள் எம்மைத் துரத்திக்கொண்டே பின் தொடருவதென்றால்..........?!

கடந்த ஐந்தாண்டுக் கொலைகளை, புலம் பெயர் மண்ணில் ஐந்தொகை போட்டுப் பார்க்கும் போது, எத்தனை கொலைகள் எம் இனத்தவர் இங்கு சந்திக்க வேண்டியிருந்துள்ளது. அதுவும், எம் இனத்தவர்களாலேயே இறைவா.........!

மதத்தின் பெயராலே மர்மக்கொலைகள், மறைமுகக் கொலைகள், தற்கொலைள்,(Religious funation), வஞ்சம் தீர்க்கும் வர்க்கக் கொலைகள்,(Revenge and vengence), பணப்பித்தர்களின் பாதகக் கொலைகள்,(Vandalion) காம வெறியர்களின் வெறியாட்டக்கொலைகள்,(Sex Maniacs), எத்தனை.?!

தாங்க முடியாத துன்பத்தைத் தாங்கி நிற்கும் குடும்பத்தை, சென்ற ஞாயிறு துக்கம் விசாரிக்கச் சென்றிருந்தவேளை, ஏராளமான உறவினர்களும் நண்பர்களும், துக்க சாகரத்தில், அமிழ்ந்தியே இருந்தனர் இறைவா! ஓர் பிஞ்சு உலகமே அறியாத வயதுச் சிறுமியவள், மிகக் கொடூரமான முறையில், கொலைசெய்யப்பட்டிருக்கிறாள். திக்பிரமை பிடித்த நிலையிலும், அந்தச் செல்வத்தின் தந்தை தந்த தரவுகள் மெய் சிலிர்க்க வைத்தன.

வருங்கால வனப்புகள், எதிர்கால எழில் மயங்கள் கல்வியில் சிறப்புகள்,


படிப்பகம்

www.padippakam.com

எத்தனை எத்தனையோ எதிர்பார்ப்புக்களை ஏங்கியிருந்த இளம் நெஞ்சம், கணப்பொழுதிலே, கயவரால் கசக்கி எறியப்பட்ட நிகழ்வை, யாரால் ஜீரணிக்க முடியும்? பெற்றோரின், ஆசைகள், அபிலாசைகள் தவிடுபொடியாகிவிட்டதை, யாரால்த்தான் ஈடு செய்ய முடியும்?! இரத்தமே உறைகிறது, இறைவா, ஏன் இந்த அனர்த்தங்கள்?......?!

மொட்டாகி, விரிந்து மணம் பரப்பும் மலராகுமுன், முளையிலே நுள்ளி எறியப்படக் காரணமாக இருந்தவர்கள் யாராயினும், பாவமன்னிப்பை எதிர்பார்ப்பது, இதைவிடக் கொடுமையிலும் கொடுமை! ஏசுபிரான் சிலுவையில் தொங்கும் போது, "பிதாவே! இவர்கள் அறியாமல் செய்கிறார்கள், இவர்கள் பாவங்களை மன்னித்தருளும்' எனப் பிராத்திக்கின்றார். இது(2000) இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்திய காவிய வரலாற்று வாக்கியம். அடுத்து வரும் இரண்டாயிரம் ஆண்டிலே, உலகமே அழியப் போகிறதாமே?! அழியட்டும்! இந்த அட்டூழியங்களை அரவணைக்கும் அத்தனை அரக்கர்களுக்காக உலகமே அழிந்து அழிக்கட்டும்...!

சட்டம் ஒரு இருட்டறை, "சித்த சுவாதீனம்" என்ற சரத்தின் பந்தியிலே, பாதகர்கள் இங்கு தமக்குச் சாதகமாக்கி, தப்பிவிடவும் சாத்தியங்கள் ஏராளம்......... தெய்வத்தின் தண்டனை காலதாமதமாகலாம். ஆனால் மக்களின் கண்டனங்கள் தெய்வங்களின் கண்களை, நிச்சயம் திறக்கும்.!

இறைவா, அகால மரணத்தைத் தழுவிக் கொண்ட இச்சிறு பிஞ்சின் பெற்றோர்களின் துயரத்திலே நாமும் பங்கு கொள்கிறோம், அவர்களின் கண்ணீரோடு, எமது கண்ணீரையும் கலந்து, காணிக்கையாக்குகின்றோம். தங்கள் அனைவரின் துயரங்களில் பங்குகொள்ளும்,

*""முகத்தான்"".ஜேசு*
*20.02.1999*



படிப்பகம்

www.padippakam.com

# Seulement onze printemps.

Transpercer par une lame,
Disparaît lentement une âme.
Cela ne cessera donc jamais?
Des cœurs qui seront toujours en sommeil.
Tant de haine,
tant de peine.
Une mère qui ne pensera qu'en enfer,
ces monstres ont-ils cœur en fer?
Des larmes de sang,
qui coulent dans le vent.
Désormais nuit blanche.
Pour les nuages de l'ange.
Une mère seule dans la nuit.
Des larmes infinies,
pour son cher fruit…

**- Kapilthev.**

படிப்பகம்

www.padippakam.com



பிஞ்சினை வெட்டிச் சிதைத்தார் – எம்
நெஞ்சினில் நெருப்பை வைத்தார்

படிப்பகம்